# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2007 / 2008

## HELD IN AUGUST – 2008

## BBA 33 – OPERATIONS MANAGEMENT

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) செயற்பாடுகள் முகாமைத்துவத்தின் நோக்கங்கள் யாவை? இந்நோக்கங்களின் முக்கியத்துவத்தை ஒரு சேவை நிறுவனத்தை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) "செயற்பாடுகள் முகாமையில் ஏற்படும் முன்னேற்றம் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும்". இப்பங்களிப்புகளை சுருக்கமாக பட்டியல் படுத்துக.

(06 புள்ளிகள்)

(இ) JUST – IN –TIME (JIT) என்பதன் மூலம் நீர் கருதுவது யாது? இது செயற்பாடுகள் முகாமைத்துவத்தின் நோக்கங்களை அடைவதில் செய்யும் பங்களிப்புகள் யாவையென ஒரு உற்பத்தி நிறுவனத்தை உதாரணமாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) Coolsuper Ltd. இலங்கையிலுள்ள ஒரு சிறப்புச் சந்தை தொடராகும். இந்நிறுவனம் தனது இன்னுமொரு கிளையை திறப்பதற்காக ஒரு சிறந்த இடத்தை தெரிவு செய்யவுள்ளது. இத்தெரிவுக்கான காரணிகளையும் அதன் முக்கியத்துவத்தையும் இனங்கண்டுள்ளது. அத்துடன் மூன்று வேறுபட்ட இடங்களையும் கண்டறிந்து அற்கான புள்ளிகளை ஆகக் கூடிய புள்ளியாக 10 தை அடிப்படையாகக் கொண்டு வழங்கியுள்ளது.

| காரணிகள் (Factors) | வரிசைப்படுத்தல் புள்ளிகள் (S.core) | | | |
|---|---|---|---|---|
| | Rank | கல்முனை | அம்பாரை | அக்கரைப்பற்று |
| 1.நுகர்வோருக்கு இலகுவாக அடையக் கூடிய வாய்ப்பு | 0.25 | 09 | 04 | 06 |
| 2.சனத்தொகை | 0.18 | 09 | 05 | 06 |
| 3.வாகனம் நிறுத்தும் வசதி | 0.15 | 05 | 07 | 06 |
| 4.கட்டிட வசதி மற்றும் அதற்கான கிரயம் | 0.22 | 06 | 07 | 07 |
| 5.போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் | 0.20 | 08 | 09 | 07 |

ஒவ்வொரு இடத்தையும் மதிப்பீடு செய்து மிகச் சிறந்ததொரு இடத்தை இந்நிறுவனத்திற்காக தெரிவு செய்க

(14 புள்ளிகள்)

(ஆ) ஒரு உற்பத்தி நிறுவனத்திற்கான தொழிற்சாலை அமைவிடம் ஒன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?

(06 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) வினைத்திறனானதொரு ஒழுங்கமைப்பின் அனுகூலங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) KMT நிறுவனமானது அதனது உற்பத்திப் பொருள் செய்முறை தொடர்பில் புதியதொரு ஒழுங்கமைப்பினை திட்டமிட்டுள்ளது. அக்குறிப்பிட்ட புதிய பொருளை உற்பத்திசெய்வதற்கான தொழிற்பாடு, அதன் முன்னைய தொழிற்பாடு, அத்தொழிற்பாட்டினை செய்து முடிக்கத்தேவைப்படும் நேர அளவு போன்றன பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| நடவடிக்கை | முன்னைய நடவடிக்கை | நேரம் (நிமிடங்களில்) |
|---|---|---|
| A | - | 6 |
| B | A | 2 |
| C | B | 2 |
| D | A | 1 |
| E | A | 7 |
| F | A | 5 |
| G | C | 6 |
| H | D, E, F | 5 |
| I | H | 4 |
| J | G | 4 |
| K | I, J | 4 |

**வேண்டப்படுவது :**

(i) உற்பத்திப் பொருள் ஒழுங்கமைப்பு வரைபடத்தை வரைக.

(ii) நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் வேலை நடைபெறுகிறது எனக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட அதியுயர் வெளியீட்டின் அளவினைக் கணிக்க.

(iii) 12 நிமிடங்களை சுழற்சி நேரமாகக் கொண்டு நீண்ட நேர வேலைக் கூறு முதலில் (LOT) என்ற விதியின் அடிப்படையில் வேலை நிலையங்களிடையே வேலைக் கூறுகளை ஒதுக்கீடு செய்க.

(iv) இவ்வொழுங்கமைப்பு வரிசையின் வினைத்திறனை தீர்மானிக்குக.

(15 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

04. ஒரு உற்பத்தி செயன்முறையின் தரத்தையும் ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் தீர்மானிக்க கட்டுப்பாட்டு வரைபடங்கள் பெரிதும் உதவுகிறது.

(அ) இடை வரைபடம் (Mean Chart) வீச்சு வரைபடம் (Range chart), P – வரைபடம், C- வரைபடம் என்பவற்றின் பயன்பாட்டை சுருக்கமாக விளக்குக.

(ஆ) ஒரு நிறுவனம் தனது பொருள் உற்பத்தி தொடர்பில் கட்டுப்பாட்டு வரைபடமொன்றை உருவாக்குவதற்காக பின்வரும் மாதிரிகளை எடுத்து பரீட்சித்தபோது கீழுள்ள அட்டவணையில் காணப்படும் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன.

| மாதிரி | குறைப்பாடுடைய பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 35 |
| 2 | 28 |
| 3 | 20 |
| 4 | 51 |
| 5 | 40 |
| 6 | 30 |
| 7 | 08 |
| 8 | 20 |

'Z' பெறுமதி பொதுவாக 3 என்றும் நியம விலகல் 99% சாதாரணம் எனவும் கருதி பின்வருவனவற்றைக் கணக்கிடுக.

(i) இடை (Mean) மற்றும் நியம விலகல் (Standard deviation)

(ii) உயர்கட்டுப்பாட்டு மட்டம் மற்றும் இழிவுக் கட்டுப்பாட்டு மட்டம்.

(iii) கட்டுப்பாட்டு வரைபடமொன்றை வரைந்து இந்நிறுவனத்தின் உற்பத்தி செயன்முறை கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்க.

(14 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

05. (அ) பெரியளவிலான ஒரு ஹோட்டல் நிறுவனம் திரவ சவர்க்காரங்களை ஒவ்வொன்றும் ரூபா 20.00 ற்கு கொள்வனவு செய்கிறது. இப்பொருட்களுக்கு கொள்வனவு கட்டளையிட ரூபா 600.00 செலவாகிறது எனவும், வருடாந்த இருப்பு வைத்தல் செலவு ஒரு அலகுப் பொருளின் பெறுமதியில் 20% மாகும் எனவும், வருடாந்த தேவை 30,000 அலகுகளாக இருக்குமெனவும் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. விநியோகத்தரின் புதிய விலைப்பட்டியலுக்கமைய 2000 அலகுகளுக்கு குறைவாக கொள்வனவு செய்யும்போது விலைக்கழிவு ஏதும் இல்லை எனவும் ஆனால் 2000 தொடக்கம் 3000 அலகுகள் கொள்வனவு செய்வதாயின் விலைக்கழிவாக 5% மும், 3001 தொடக்கம் 4000 வரையிலான 7% மும், 4000 இற்கு மேலாயின் 10% மும் வழங்கப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் ஒரு குறித்த நேரத்தில் கொள்வனவு கட்டளையிட வேண்டிய உச்ச (Optimal) அலகுகளைக் கணிக்குக.

(16 புள்ளிகள்)

(ஆ) ABC Analysis (பகுப்பாய்வு) என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

06. (அ) ஒரு தொழிற்சாலையின் Stop watch time study முறையில் செயற்பாடுகளுக்கான நேரடியான நேர அளவீடு படிக்கப்பட்டது. ஆய்வாளர்கள் தொழிலாளர்களின் வேலை மதிப்பை 112% எனவும், அவர்களுக்கான மேலதிக வேலை நேரமாக 15% மும் வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணை அவதானிப்பைக் காட்டுகிறது

| Cycle | Time (min) | Cycle | Time (min) |
|---|---|---|---|
| 1 | 2.5 | 6 | 2.4 |
| 2 | 2.8 | 7 | 2.3 |
| 3 | 1.9 | 8 | 2.5 |
| 4 | 2.3 | 9 | 2.5 |
| 5 | 2.3 | 10 | 2.4 |

இக்குறித்த வேலைக்கான நியம நேரத்தை கணிக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) ஒரு நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் வேலை அளவீடு எவ்வாறு அந்நிறுவன செயற்பாடுகள் முகாமையின் நோக்கங்களை அடைந்து கொள்ள பங்களிப்புச் செய்கிறது என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)
(புள்ளிகள் 20 புள்ளிகள்)

*****